## ஆயுளைக் கூட்டும் ஆரோக்கிய வனம்

## 25.01.2013








ஓங்கி உயர்ந்த செழிப்பான மலைத்தொடர், அதிலிருந்து கசிந்து வரும் சிற்றோடை, நீர் ததும்பும் இரண்டு குளங்கள், வரிசை கட்டி நிற்கும் புளியமரங்கள், இன்னும் இருக்கிறோம் என்று கட்டியம் கூறும் நாட்டுமாடுகள், அழகிய வீடு, சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் விரிந்து பரந்துள்ள தென்னை வனம், ஊடுபயிராகவும், தனியாகவும் வளர்ந்து கொண்டிருக்கும் தேக்கு, பாக்கு, மலைவேம்பு, உள்ளிட்ட பலவகை மரங்கள், பண்ணையைச் சுற்றிலும் அரணாக சோலார் மின்வேலி.. இப்படி ஒரு பண்ணைக்குரிய அத்தனை அம்சங்களாலும் நிரம்பி வழிகிறது அந்தப் பண்ணை. இது… கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோட்டூர், மலையாண்டிப்பட்டணம் அருகே அமைந்திருக்கும் சந்தோஷ் பண்ணை! முற்பகல் பொழுதில் அந்தப் பண்ணைக்குள் நாட்டுமாடுகளை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்… 'பண்ணையின் உரியையாளரும் … ஜப்பானிய இயற்கை விவசாய வல்லுநர் மசானபு ஃபுகோகாவிடம் நேரடிப் பயிற்சி பெற்றவருமான இயற்கை விவசாயி மது. ராமகிருஷ்ணன். இதுவரை 40 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இங்கு வந்து 'ஆக்ஸிஜன்' வாங்கிட்டு போயிருக்காங்க. ஆயுளைக் கூட்டும் ஆரோக்கிய வனமாக இதை மாற்றிக் கொண்டிருக்கிறேன். யானை, சிறுத்தை, மான், நரி, இப்படி பல விதமான விலங்குகளும்.. மயில், குயில், மணிப்புறா, மாடப்புறா என்று பலவகை பறவைகளும் இங்கு அவ்வப் போது வந்து தங்கிவிட்டு செல்கின்றது என்று பெருமையோடு சொன்னார். பூர்விகமே இந்த ஊர்தான். இந்தப் பகுதியில் தென்மேற்குப் பருவமழை தவறாமல் பெய்யும். நிலக்கடலை, கேழ்வரகு, சோளம் என்று தானிய வெள்ளாமையும், பாசிப்பயறு, கொள்ளு, தட்டை, உளுந்து, துவரை என்ற பயறு வகைகளும் மானாவாரியில் சாகுபடி சக்கை போடு போட்ட ஊரு. ஒவ்வொருவரும் நூற்றுக்கணக்கான நாட்டுமாடுகளை வைத்திருந்தாங்க. எல்லா வீட்டுத் தூண்களிலும் மோர் சிலுப்பும், மற்ற சத்தமும் கேட்டுக் கொண்டே இருக்கும். பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் வந்து, மானாவாரி நிலங்களையெல்லாம் தென்னந்தோப்பாக மாற்றிவிட்டது.

**வரவு எட்டணா…. செலவு பத்தணா!**

அப்பா, விவசாயத்தைப் பார்த்து கொண்டார். அரசாங்கத்தில் பொறியாளர் வேலையில் இருந்த நான், அதை உதறிவிட்டு, ஊரில் உரக்கடை ஆரம்பித்தேன். தோட்டத்திற்குப் பக்கமே போகாமல், வியாபாரமே முக்கியம் என்று இருந்துவிட்டேன். அப்பா, இறந்த பிறகு விவசாயம் பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பண்ணைக்கு வந்ததும், முதல் வேலையாக இத்தனை நாளும் அப்பா எழுதி வைத்திருந்த விவசாய வரவு – செலவு கணக்குகளைக் கையில் எடுத்தேன். அதிர்ந்தேன், இத்தனை வருடமாக விவசாயம்

பார்த்தும்.. வரவை விட, செலவுதான் அதிகமாக இருந்தது. அப்ப, இத்தனை வருடமாக அப்பா விவசாய வேலை பார்த்தது எல்லாமே நஷ்டத்திற்குதானா என்று யோசித்தேன்.

**இயற்கைக்குத் திருப்பிய ஃபுகோகா!**

செலவு கணக்கில்.. ரசாயன இடுபொருள் செலவுகள் தான் அதிகமாக இருந்தது. அது சரியான விவசாய முறையாக எனக்குத் தோன்றவில்லை. உடனே என் உரக் கடைக்கு பூட்டுப் போட்டுவிட்டு, ரசாயன விவசாயத்திற்கான மாற்று வழி தேடத் தொடங்கினேன்.
அந்த சமயத்தில்தான்… நண்பர் மூலமாக மசானபு ஃபுகோகா எழுதின ஒற்றை வைக்கோல் புரட்சி, புத்தகம் கிடைத்தது. முழுசாக படித்ததில் ரசாயனத்திற்கு எதிரான மாற்றுவழியை அந்தப் புத்தகம் எனக்குக் கற்றுக் கொடுத்தது. 'விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்றும் ஒரே வழி.. இயற்கை வேளாண்மைதான் என்று தெரிந்து கொண்டேன். 2002 ஆம் வருடம் டேராடூனில் தங்கியிருந்தது, 'மசானபு ஃபுகோகா' நடத்திய இயற்கை வேளாண்மைப் பயிற்சியில் கலந்து கொண்டு வாரம் அவரிடம் நேரடிப் பயிற்சி எடுத்தேன்.

**ஊக்கம் கொடுத்த ஊடுபயிர்கள்!**

ஊருக்குத் திரும்பியதும், 'சுலப வேளாண்மைக் குழு' ஒன்றை ஆரம்பித்தேன். சுயசார்பு (சு) … லாபம் (ல)… பண்ணையம் (ப).. என்ற முறையை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வேலையை அந்தக் குழு செய்தது. என்னுடைய பண்ணையை முழு இயற்கை விவசாயப் பண்ணையாக.. வேளாண் காடுகள் வளர்ப்பு மையமாக மாற்றினேன். தொடர்ந்து… நம்மாழ்வார் போன்றவர்களின் தொடர்பும், ஆலோசனையும் கிடைத்தது.

தென்னை மட்டுமே தனிப்பயிராக இருந்த பண்ணையில்… ஊடுபயிராக, கோக்கோ, பாக்கு, ஜாதிக்காய், கறிப்பலா, சப்போட்டா, கொய்யா, நெல்லி, கிளா போன்ற பயிர்களை நட்டேன். 10 வருடம் ஆன நிலையில்.. எல்லாமே வளர்ந்து பலன் கொடுத்து கொண்டிருக்கிறது.
6 ஏக்கரில் .. 20 வயதுள்ள 100 தேக்குமரங்களையும், ஈட்டி, சவுக்கு, யூகலிப்டஸ், வகையில் தலா 50 மரங்களை வரப்புப் பயிராகவும் வளர்த்து கொண்டு வருகிறேன். 750 பாக்கு மரங்களும் ஊடுபயிராக பலன் தந்து கொண்டிருக்கிறது.

**தீவனச் செலவு இல்லை!**

19 நாட்டு மாடுகள் வைத்து பராமரித்துக் கொண்டு வருகிறேன். என்னுடைய பண்ணையைச் சுற்றிலும் வனப் பரப்புடன் எல்லை இருப்பதால், தழை-தாம்பு, புல் – பூண்டு என்று மேய்ச்சலுக்குப் பஞ்சமில்லை. காலையில் மாடுகள் அவுத்து விரட்டினால் போதும்… வயிறார மேயும். மத்தியான நேரத்தில் உப்பாறு ஓடையில் தண்ணீரை குடித்துவிட்டு, சாயங்காலம் தொழுவம் வந்துவிடும்.

**ஜொலிக்க வைக்கும் ஜீவாமிர்தம்!**

இதுதாங்க இந்தப் பண்ணையின் உரத் தொழிற்சாலை. 19 நாட்டு மாடுகளுடைய சாணத்தைப் பயன்படுத்தி ஜீவாமிர்தக் கரைசல் தயாரித்து, பாசனத் தண்ணீரில் கலந்து, வாரம் ஒரு முறை 50 ஏக்கருக்கும் பாய்ச்சுகிறேன். இதனால் எந்த பங்கமும் இல்லாமல் மரங்கள் நெடுநெடு என்று வளர்ந்து நல்ல மகசூல் கொடுக்கிறது.

இந்தப் பகுதியில் இருக்கும் தென்னைகளில் ஈரியாபைட் தாக்குதல் 40% இருக்கு. ஆனால், என்னுடைய தோப்பில் இதனுடைய தாக்குதல் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து இப்போது 5% அளவிற்குதான் இருக்கு. அதனால், மற்ற விவசாயிகளிடம் வாங்கும் விலையைவிட, என்னுடைய தேங்காய்களுக்கு 50 பைசா கூடுதல் விலை கொடுக்கிறார்கள் வியாபாரிகள். இதற்கு காரணமே.. ஜீவாமிர்தம்தான் என்றார். எதிர் காலத்தில் இதை ஆயுள் கூட்டும் ஆரோக்கிய வனம் என்று மாற்றப் போகிறேன். அதற்கான ஆயத்த வேலைகள் துவங்கிவிட்டேன் என்று சொன்னார்.
இந்தப் பண்ணையில் இரண்டு சிறிய குளங்கள் இருக்கு. அதன் கரையில் மர வீடு ஒன்று அமைக்கப் போகிறேன். அதில் சோலார் பேனல், சாண எரிவாயு அடுப்பும் அமைக்கப் போகிறேன். வனத்தை ஒட்டியுள்ள இந்த மர வீட்டில் குடும்பத்துடன் தங்கி புத்துணர்வு பெற நினைப்பவர்கள் தாராளமாக வந்து போகலாம். மர வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் ஆழம் குறைவான குளத்தில் படகு சவாரியும் செய்யலாம் என்றார்.

---

தொடர்புக்கு

**மது.ராமகிருஷ்ணன், செல்போன் : 94424 – 16543, 98658 - 57134**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.01.13 www.vikatan.com***